பக்கங்கள் - எட்டு

பொது சன நூலகம்
21 JAN 1997
நகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 06 ஞாயிற்றுக்கிழமை (19-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 53

# 2 அதிகாரிகள் உட்பட 22 பொலீஸார்
# கெப்பிற்றிக்கொலாவ தாக்குதலில் பலி!

கொழும்பு, ஜன. 19

அநுராதபுரம் மாவட்டம் கெப்பிற்றிக்கொலாவ பகுதியிலிருந்து சுமார் எட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கன்ககாவெவ என்ற இடத்தில் உள்ள பொலீஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை 3.15 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 22 பொலீஸாரும் ஊர்காவல் படையினர் ஒருவரும் கொல்லப்பட்டனர்; பதினாறு பொலீஸாரும் நான்கு ஊர் காவல் படையினரும் படுகாயமடைந்தனர். அவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

சுமார் இருநூறு பேரைக் கொண்ட புலிகளின் அணி ஒன்று இத்தாக்குதலைத் தொடுத்ததாகக் கூறப்படுகின்றது.

தாக்குதலை அடுத்து கெப்பிற்றிக்கொலாவ, தம்பண்ணாவ பகுதிகளில் இருந்து மேலதிக இராணுவத்தினர் அந்த இடத்துக்கு அனுப்பப்பட்டதாகவும் —

தாக்குதல் நடந்த இடத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் —

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் புலிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது,

தாக்குதலில் காயமுற்ற பொலீஸார் மற்றும் ஊர் காவலர்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

(உ-5-10)

# அரசியல் தீர்வுடன்
# போர் முடிவுக்கு வரும்!

## சந்திரிகா நம்பிக்கை

**கொழும்பு, ஜனவரி 19**

**இலங்கையின் இனப்போர் அரசியல் தீர்வுடன் முடிவுக்கு வரும்.**

**இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி —

கடந்த 14 ஆண்டு காலமாக சுமார் ஐம்பதாயிரம் பேரின் உயிரைப் பலி கொண்ட யுத்தத்தை அரசியல் தீர்வின் மூலம் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என அங்கு நம்பிக்கை வெளியிட்டார்.

அங்கொன்றும்இங்கொன்றுமாகத் திடீர் தாக்குதல்களை நடத்துவதைத் தவிர புலிகளால் வேறு எதுவும் செய்ய முடியாது. அவர்கள் மிகவும் பலவீனப்பட்டுப் போயிருக்கின்றார்கள்.

சுமார் பத்து முதல் 12 வய

(8ஆம் பக்கம் பார்க்க)

## லாகூரில் குண்டு வெடிப்பு

பாகிஸ்தானின் லாகூர் நீதிமன்றத்துக்கு வெளியே நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சுமார் 20 பேர் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்திவைக்கப்பட்டிருந்த இந்தக் குண்டு சுனி முஸ்லிம் தலைவர்கள் இருவர் நீதிமன்ற விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சமயம் வெடித்தது.

கொல்லப்பட்ட 20 பேரில் அந்த சுனி முஸ்லிம் தலைவர்கள் இருவரும் அடங்குவர்.

ஷியா முஸ்லிம்களே இந்த குண்டை வைத்ததாக நம்பப்படுகிறது. [இ]

# புலிகள் மீதான தடையை என்றுமே எதிர்த்ததில்லை

## ஜெயின் கமிஷன் முன் கருணாநிதி

புதுடில்லி, ஜன. 19

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை தாம் என்றுமே எதிர்த்ததில்லை என்று தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி ஜெயின் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இலங்கையின் இன்னொரு இயக்கமான ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா 1990 ஆம் ஆண்டு சென்னையிலும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம், ரெலோ தலைவர் சபாரெத்தினம் ஆகியோர் இலங்கையிலும் கொலை செய்யப்பட்டபின்பே விடுதலைப் புலிகளின் பால் தமக்கிருந்த அனுதாபம் அடியோடு மறைந்துவிட்டதாக அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மீதான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப பதவிக்குப் பயந்து கருணாநிதி சரணாகதி போல......!

# இனப்பிரச்சினை குறித்து குஜ்ரால் பேசமாட்டார்!

## மூன்று நாள் இலங்கை விஜயம் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 19

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் இனப்பிரச்சினை குறித்து இங்கு பேசமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்று இந்திய அரசு என்றுமே கருதி வந்துள்ளது. எனவே அதில் தலையிடும் எண்ணம் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கை விஜயத்தின் போது இலங்கை மீனவர்களால் தமிழக மீனவர்கள் சுடப்படுவது குறித்தும், மீனவர்கள் மீன்பிடிக்கும் எல்லை பற்றியும் பேசப் போவதாக குஜ்ரால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் உட்பட முக்கிய தலைவர்களை அவர் சந்திக்க உள்ளார்.

(இ- 5)

# துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இரு சடலங்கள் ஒப்படைப்பு

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகத் தெரிவித்து இரு சடலங்கள் நேற்று முன்தினம் மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

பொன்னாலையில் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணி அளவில் சுடப்பட்டதாக பண்டத்தரிப்பு வடலியடைப்பைச் சேர்ந்த ரட்ணசபாபதி விக்கினேஸ்வரன் (வயது 40) என்பவரது சடலம் இளவாலைப் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது. இவரது தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது. பின்பக்கத் தலை சிதறியிருந்தது.

சங்கானையில், நேற்று முன்தினம் காலை 9.50 மணிக்குச் சுடப்பட்டதாக சுமார் 20 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர் ஜெகன் எனப் பெயர் தெரிவிக்கப்பட்டது. கழுத்து, இடது பக்க நெஞ்சு, கை ஆகிய உறுப்புக்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கான அடையாளங்கள் காணப்பட்டன.

இரு சடலங்களும் மரண விசாரணையின்பொருட்டு ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டன.

(இ-15)

# வரதராஜப்பெருமாள் எங்கே?

கொழும்பு, ஜன. 19

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இந்தியாவில் இல்லை என ஜெயின் ஆணைக்குழு விசாரணைகளின்போது இந்திய அரசுத் தரப்புச் சட்டத்தரணி தெரிவித்திருந்தபோதிலும் —

வரதராஜப்பெருமாள் தொடர்ந்து இந்தியாவின் ஒரிஸ்ஸா மாநிலத்திலேயே — இந்திய அதிகாரிகளின் பாதுகாப்புடன் — தங்கியிருப்பதாக செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

வரதராஜப்பெருமாள் நாடு திரும்புவதற்கு விருப்பம் கொண்டிருப்பதாகவும் —

அதற்கான தகுந்த சூழ்நிலையை அவர் எதிர்பார்த்திருப்பதாகவும் —

கொழும்பில் உள்ள தமது கட்சிப் பிரமுகர்களுடன் தினசரி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அரசியல் நிலைவரங்களை அவர் கேட்டறிந்து வருவதாகவும் —

ஈ.பி.ஆர்.எல்.எவ். வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. (உ-150)

# தேசிய மனித உரிமைக்குழு விரைவில் இயங்க ஆரம்பிக்கும்

## ஆணையாளர்கள் நியமனமாவர்

கொழும்பு, ஜன. 19

தேசிய மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அடுத்த சில தினங்களில் ஆணையாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றார்கள்.

ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டதும் தேசிய மனித உரிமைக்குழு செயற்படத் தொடங்கும்.

கொழும்புச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

மேற்படி ஆணைக்குழுவை நியமிப்பதற்கான சட்டம் கடந்தஒக்டோபரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆணைக்குழுவுக்கு ஐந்து ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் அவர்களில் மூவர் சிங்களவர்களா

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**G. C. E. A/L**

**இந்துநாகரிகம்**

+

**இந்துசமயம்**

திரு. சிவமகாலிங்கம்

**ஆரம்பம்:- 20 - 01 - 97**

திங்கள் காலை 7.00 மணி (புதிய நேரம்)

(44768)



யாழ்.

# இடைக்காடு மகா வித்தியாலயம்

**1995** G. C. E. A/L பரீட்சை முடிவுகள் வெளியாகி வெட்டுப்புள்ளி அடிப்படையில் பெறுபேறு:-

E 1 - 2 மாணவர்
E 2 - 3 ,,
பௌதிக விஞ்ஞானம் 4 ,,
கலை 2 ,,

மேற்படி மாணவர்களுக்குப் பாராட்டுக்களும், நல்வாழ்த்துக்களும்.

**அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள்.**

இடைக்காடு மகா வித்தியாலயம்.

(44761)



# அகவை அறுபது காணும்

**எம் நல்லாசான்**

## திருமிகு அ. பொ. செல்லையா

**அவர்களை**

## வாழ்த்துகின்றோம்



செந்தமிழ்த் தேனே வாழி
செகமெல்லாம் நிறைந்தாய் வாழி
அந்தமில் நட்பின் கோனே
அண்ணாவழி அசலமே எம்
சிந்தையில் நிறைந்த செல்வ
செல்லையப் பெரியோய் வாழி
பந்தமொடு உரிமையாக
எம்மோடென்றும் வாழி!

வாழ்க! நீடூழி வாழ்க!

**ஆசிரியர், மாணவர், குடும்பம்.**

**( 1980 — 1991 )**

**பளை மகாவித்தியாலயம்,**
**பளை.**

(சி/3956)


# திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் புதிய அலுவலகத் திறப்புவிழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கோயில் வீதியிலுள்ள கட்டடத்தில் நடைபெறும்.

(இ-4-5)

# யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். பல்கலைக்கழகத்தின் 1994 / 95 ஆம் கல்வி ஆண்டுக்கான வெளிவாரிப் பரீட்சைகளான முதற்கலைத் தேர்வு - 1995, முதல் வர்த்தகத்தேர்வு - 1995 ஆகிய பரீட்சைகள் ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் நடைபெற இருப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(இ-5)

# தீர்வையற்ற விற்பனை நிலையம்

திருகோணமலை, ஜன. 19

திருகோணமலை துறைமுகப் பகுதியில் தீர்வையற்ற விற்பனை நிலையம் (Duty Free Shop) ஒன்றைத்திறந்து வைக்க துறைமுக சேவைகள் திணைக்களம் முயற்சித்து வருகின்றது.

இந்த நிலையத்தைத் திறப்பதற்கான காணி ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியையும் மது விற்பனை உரிமத்தையும் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-150)


**A/L 99**

**கலை, வர்த்தகம்**

வகுப்பு ஆரம்பமாகியுள்ளது

**புவியியல்**

**திரு. இக்னேசியஸ் B. A.**

(புவியியல் சிறப்பு)

**O/L, year 10, 9**

**விஞ்ஞானம்**

**திரு. P. சந்திரன்**

**திரு. டார்வின்**

**கணிதம்**

**திரு. அருள்நேசன்**

**SHAMROCK**

யா/ ஈச்சமோட்டை வீதி.

(44766)



உ

விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான தாது ஆண்டு தை மாதம் 7 ஆம் நாள் (**20 - 01 - 97**) திங்கட்கிழமை நண்பகல் 12.05 — 1.30 மணி வரையுள்ள, சுபமுகூர்த்த வேளையில்,

**எமது புத்திரன்**
திருநிறை செல்வன்
**தம்பிப்பிள்ளை**
**யோகரட்ணம்**
அவர்களுக்கும்



**எமது புத்திரி**
திருநிறை செல்வி
**சொர்ணவடிவேல்**
**மீனலோசனி**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழ்த்திடப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் உறவினர்கள், நண்பர்கள் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

**திருமதி தம்பிப்பிள்ளை,**
வாலையம்மன் கோயிலடி,
திருநெல்வேலி.

**திரு. திருமதி சொர்ணவடிவேல் (மாதிரமணி)**
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

(44765)


# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை சிறிசெல்வன்

(தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை; யாழ்ப்பாணம்.)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை சிறிசெல்வன் காலமாகிவிட்டார்.

இவர் அந்தோனிப்பிள்ளை - காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், எவ்மோனியாவின் அன்புக் கணவரும், அன்ரன் யூட்டின் அன்புத் தந்தையும், ருக்மணி, சந்திரா, இந்திரா, சத்தியசீலன் (மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்), அலோசியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அடைக்கலமுத்து (G.S. பெரியமடு), யோன், மகிள், மேரி யோசேப்பின் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(19-1-97)ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நாவாந்துறை சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
**அ. சத்தியசீலன்**
(மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
**J.E. இராசநாயகம்**
(தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.)

கடற்கரை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(44758)

## திருமதி ஸ்ரெலா மரியதாசன்

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ஸ்ரெலா மரியதாசன் 15-01-97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் திருமதி றோசலின் மாசல், காலஞ்சென்ற ஜேம்ஸ் மாசல் ஆகியோரின் அன்பு மகளும், ஜெ.ஏ. மரியதாஸின் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) மனைவியும், காலஞ்சென்ற பிறயன் அருள்ராஜ் மற்றும் ஜெரின் நிராஜ் (ஜேர்மனி), மரினா நிலாந்தி, கிறிசாந்தி (தி. கு. க. ம. பாடசாலை) ஆகியோரின் தாயாரும், லோறன்ஸ், கிறிபேட், புலோரா, நெல்சன் அன்ரனி, அருளானந்தம், கிப்பொலிற்றர், ராஜினி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
**ஜெ.ஏ. அன்ரனிப்பிள்ளை (மைத்துனர்)**
(இலங்கை பெற்றோலியம் கூட்டுத் தாபனம்)

71, இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(44763)

## செல்லத்துரை தபானந்தம்

(மண்டைதீவு)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை தபானந்தம் (முன்னாள் காவலாளி, மண்டைதீவு மகா வித்தியாலயம்) 14 - 01 - 97 அன்று உடையார்கட்டில் காலமானார்.

இவர் சங்கநிதியின் அன்புக் கணவரும், கிருபவாணி, ஒளிவண்ணன் (வேலணைக் கல்விக் கோட்டம்), சோமமாலினி, கோகுலவண்ணன், விஜயபாமன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சரவணபவன், வசந்தமாலினி (ஆசிரியை), வசந்தறோகினி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருபவன், சாம்பவன், பிரணவன், கேதாரணி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 - 01 - 97 ஆம் திகதியன்று உடையார்கட்டில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**கோகுலவண்ணன்**
(மகன்)

இல. 8,
வில்வம் தெரு,
அரியாலை.

(44767)

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

(பிரபல வர்த்தகர், கல்கமுவ, யாழ்ப்பாணம், காரைநகர்)

அறுகம்புலம் காரைநகரைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 19, கோபால் லேன், கே. கே. எஸ். வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும், திருஞானசம்பந்தன், காலஞ்சென்ற சிவஞானமூர்த்தி (தருமர்), சிவதேவி (கொழும்பு), சாரதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அருட்சோதியின் (கொழும்பு) மாமனாரும், துசியந்தன், அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19-01-97) இன்று 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருஞானசம்பந்தன்**
(மகன்)

(9185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இனப்பிரச்சினையை இலங்கை அரசே தீர்க்க வேண்டும்

## அதுவே இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயம் தொடர்பாக இரு நாடுகளின் அரசுகளுக்கும் பூரண திருப்தி.

ஜனாதிபதியின் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை தேவகௌடா வரவேற்றுள்ளார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தற்போதைக்கு அவசியம் இல்லை என்றும் இந்தியத் தரப்பு கூறியிருக்கிறதாம்.

''எங்களுக்கிடையில் எந்த ஒரு விடயத்திலும் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. இருதரப்பு உறவுகள் சுமுகமானவையாகவும் நல்லுறவு நிறைந்தவையாகவுமே உள்ளன'' என்று சொல்லியிருக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர்.

சுமுகமான உறவு நிலவுவதாக கூறுவது சம்பிரதாயமான ஒருவார்த்தையாகக் கொள்ளப்படலாம். ஆனால் ''எந்த ஒரு விடயத்திலும் கருத்து வேறுபாடு இருக்கவில்லை'' என்று கூறுவது சம்பிரதாயத்திற்கு கூறப்படும் வார்த்தையல்ல.

பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் பேசிவிட்டு அப்படியான ஒரு கருத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறமுடியாது. அப்படிக் கூறினால் அவர் பதவியில் நீடிக்கவும் முடியாது.

அதேபோல, இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் இப்படியான ஒரு கருத்தைக் கூறியதும் கிடையாது.

எனவே இலங்கை அரசாங்கத்தின் இன்றைய அணுகுமுறைகளுக்கு ஆதரவளிப்பதும், நட்பு நாடு என்ற வகையில் உதவுவதும்தான் இந்திய அரசின் இன்றைய வெளிநாட்டுக் கொள்கை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முன்வைத்துள்ளோம். புலிகளை வெற்றி கொள்ள இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்'' என்பதுதான் அரசாங்கம் வெளியுலகுக்கு சொல்லும் செய்தி.

அந்தச் செய்தியை இந்திய அரசும் அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது மீண்டும் ஒருமுறை அதனை உறுதிசெய்திருக்கிறது இந்திய அரசு.

### ராமின் பேட்டி

இந்தியாவின் பிரபல ஆங்கிலத் தினசரி 'இந்து.' 'இந்து' பத்திரிகைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் ராம்.

ஒரு காலத்தில் புலிகளின் தீவிர ஆதரவாளராக இருந்த ராம், ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் புலிகளின் அதிதீவிர எதிர்ப்பாளராக மாறிவிட்டார்.

ராம் ஆசிரியராக இருக்கும் 'புரொன்ட்லைன்' சஞ்சிகையில்தான் கடந்த ஆண்டு ஜனாதிபதியின் பேட்டி ஒன்றும் வெளியாகி இருந்தது. முழுக்க முழுக்க ஜனாதிபதியின் இமேஜை உயர்த்துவதாகவும், வெளியுலகில் புலிகளின் பிரசாரங்களுக்கு பதிலடி கொடுப்பதாகவுமே அப்பேட்டி பிரசுரமாகியிருந்தது.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை அடுத்து 'இந்து' பத்திரிகை சிறப்புச் செய்திகளை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து மகிழ்ச்சியும் வெளியிட்டுள்ளது.

''இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையே நட்புறவு தொடர்பான புதுப்பிக்கப்பட்ட உத்தரவாதத்தையும் ஜனாதிபதி சந்திரிகா பெற்றுக் கொண்டார்'' என்று தெரிவித்துள்ளது 'இந்து'.

97இல் அரசாங்கம்வடக்கு-கிழக்கு யுத்தத்தில் தனது இராணுவ பலத்தை மேலோங்கச் செய்வதற்கான மறைமுக ஆசீர்வாதம் இந்தியாவிடம் இருந்து பெறப்பட்டுவிட்டது.

1986 களுக்கு முன்னர் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு குறுக்கீடாக இருந்த இந்தியாவிடம் இப்போது இராணுவ நடவடிக்கைகளை தொடரும் முடிவுக்கு வாழ்த்துப் பெற்றுக் கொண்டு திரும்பியிருக்கிறார் ஜனாதிபதி.

### கேள்விக்குரிய மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்

இந்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேள்விக்குறியாகிவிட்டது.

இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்குக் கிடையாது. இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதுதான் இந்தியாவின் கொள்கை.

பொது எதிரியாக புலிகளை கணித்து இரு நாடுகளின் அரசுகளும் கைகோர்த்து நிற்கின்றன. இந்நிலையில் இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய இந்தியா முன்வரப் போவதில்லை. இலங்கை இனப்பிரச்சினையை இலங்கை அரசே தீர்த்துக் கொள்ளலாம். அதற்கு முழு ஆதரவு என்பதுதான் இந்திய நிலைப்பாடு.

இந்த ஆதரவு நிலைமையை தக்கவைத்துக் கொண்டு போரில் வெற்றிபெறுவதே இலங்கை அரசின் உடனடி நிலைப்பாடு.

இந்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வருவதை இலங்கை அரசும் விரும்பாது. தான் ஒதுங்கி நிற்கும் போது வேறு ஒரு நாடு இங்கு தலையிட்டு மத்தியஸ்தம் செய்வதை இந்தியாவும் விரும்பாது.

எனவே- 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' தற்போதைக்கு எட்டாக் கனிதான்! ★

[நன்றி: தினமுரசு]

# கிளிநொச்சியில் வாழ்கின்ற மக்களுக்கு இயல்பு வாழ்க்கை இனி எப்போது?

கிளிநொச்சி உட்பட வன்னி பெருநிலப் பரப்பில் உள்ள மக்களின் கஷ்டங்களையும் அங்குள்ள வாழ்க்கை நிலையையும்—

தனது சொந்த அனுபவத்தைக் கொண்டு கட்டுரையாக வடித்துள்ளார் உதயன் செய்தியாளர் **"நாகமி"**

குளங்களால் வளம் பெற்றதும், தமிழர் பிரதேசத்தின் நெற்களஞ்சியம் என்று பலராலும் போற்றப் படுவதுமான கிளிநொச்சி மாவட்டம் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து நிற்கின்றது.

''சத்ஜெய'' இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சி நகரத்திலும் அதனையடுத்துள்ள பகுதிகளிலும் குடியிருந்த லட்சக் கணக்கான மக்களின் வாழ்வு அவலங்கள், இன்னல்கள், சொல்லொணாத் துன்பங்கள் நிறைந்ததாக மாற்றமடைந்தது.

சமூக, பொருளாதார நிலைமைகள் யாவும் ஒவ்வொரு குடும்பத்தையும் பெரிதும் பாதித்துள்ளதை நேரடியாக அவதானிக்க முடிந்தது,

குறிப்பாக யாழ். மாவட்டத்திலிருந்துஇடம்பெயர்ந்து சென்ற மக்களை பனையால் விழுந்தவரை மாடேறி மிதித்தது போன்ற நிலைமைக்கு ''சத்ஜெய'' இராணுவ நடவடிக்கை தள்ளியது என்றே கூற வேண்டும்.

கிளிநொச்சி நகரத்தில் வசித்த நிரந்தர வாசிகளும் யாழ். மாவட்டத்திலிருந்து அங்கு இடம்பெயர்ந்து சென்று பெரும் பிரயத்தனத்தினால் பாடுபட்டு வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியனவற்றை நிறுவியவர்களும் அனைத்தையும் கைவிட்டு திசைமாறிய பறவைகளாக ஓட வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டனர்.

உருத்திரபுரம், ஜெயந்தி நகர், கனகபுரம், திருவையாறு, முறிப்பு, தோணாவில், உதயநகர், செல்வா நகர், இரத்தினபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை ஆகிய அயற் கிராமங்களில் வசித்த பல ஆயிரக்கணக்கானவர்களும் பாதுகாப்புக் கருதி தூரஇடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர்.

இதுவரை அமைதிப் பிரதேசமாக இருந்து வந்த குடியேற்ற திட்ட விவசாய கிராமங்களான அக்கராயன் குளம், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், மல்லாவி, முழங்காவில், ஜெயபுரம், கிராஞ்சி ஆகிய கிளிநொச்சிக்கு மேற்கேயுள்ள பகுதிகளிலும் —

விசுவமடு, புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், நெடுங்கேணி, ஒலுமடு, கருப்பட்டி முறிப்பு, மாங்குளம், பனிச்சங்குளம் பழைய முருகண்டி, துணுக்காய் ஆகிய பகுதிகளிலும்- இடம் பெயர்ந்த மக்கள் பெருமளவில் தஞ்சமடைந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்த இடம் பெயர்வுகளினால் அதிக முக்கியத்துவம் பெற்றவை ஸ்கந்தபுரம் அக்கராயன் கிராமங்களே!

### இடம் மாறிய அலுவலகங்கள்

கிளிநொச்சி நகரில் அமைந்திருந்த மாவட்ட அரசாங்க அதிபர் செயலகம் (கச்சேரி), உதவி அரசாங்க அதிபர் பணிமனை மற்றும் சுகாதார, விவசாய திணைக்கள பணிமனைகள், பிரதம தபால் அலுவலகம் உட்பட பெரும்பாலான அரச திணைக்களங்களின் தலைமைப் பணிமனைகளும், வங்கிகளும், ஸ்கந்தபுரம், அக்கராயன் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு தற்போதும் அங்கேயே செயற்பட்டு வருகின்றன.

இதே வேளை இடம் பெயர்ந்த அளவெட்டி, வேலணை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி தெற்கு ஆகிய பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் தலைமைப்பணிமனைகளும் இதர அரச கூட்டுத்தாபனங்கள், தனியார் வர்த்தக நிறுவனங்கள் என்பனவும் இங்குதான் செயற்பட்டு வருவதால் மேற்படி இரு கிராமங்களும் தற்போது போக்குவரத்து நெருக்கடி நிறைந்த - மக்கள் குடிசன செறிவு மிகவும் அதிகரித்த நிலையில் ஒரு நகரமாக இன்று உருவெடுத்துள்ளன.

இதே வேளை கிளிநொச்சி மாவட்ட அரச வைத்திய சாலை அக்கராயன் அரச வைத்தியசாலையில் தற்போது இயங்கி வருகின்றது.

மருந்துத் தட்டுப்பாடு, டாக்டர்கள் பற்றாக்குறை, ஊழியர் பற்றாக்குறை, வார்ட்டுகளில் இடப்பற்றாக்குறை, குடிதண்ணீர் தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகளுக்கு இவ் வைத்தியசாலை முகம் கொடுத்து வருகின்ற போதிலும் வருவாய் எதுவுமின்றி இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு தன்னாலான வைத்திய சேவையை வழங்கி வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

தினமும் நீண்ட கியூ வரிசையில் வரும் நோயாளர்களை தங்கள் கடமை நேரத்துக்கும் மேலாக நின்று சேவையாற்றி வரும் டாக்டர்களின், ஊழியர்களின் சீரிய பணியை இக்கால கட்டத்தில் எவரும் போற்றத்தான் செய்வார்கள்.

வார்ட்டுகளில்அனுமதிக்கப்படும் நோயாளர்களில் சிலர் மரணமடைந்து வீடும் சந்தர்ப்பங்களில் அவர்களின் உடல்களை எடுத்துச் சென்று வீட்டில் மரணச்சடங்கு செய்யமுடியாதநிலைமைகூட பல குடும்பங்களில் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

இருப்பதோ கிடுகினால் மேய்ந்த சிறிய கொட்டில். வருமானமோ, தொழிலோ எதுவுமில்லாது வெறும் அரச நிவாரணத்தையே நம்பி வாழும் நிலை.

இந்நிலையில் வைத்தியசாலையில் இறந்தவரை எப்படி வீட்டில் கொண்டு போய் மரணச்சடங்கு செய்து இறுதி கிரியைகளை நடத்த முடியும் அவர்களால்? இறந்தவரின் உடலை அரசு செலவில் அடக்கம் செய்யுமாறு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு விம்மிய நெஞ்சங்களுடன் சென்ற பல குடும்பங்களை அங்கு நேரடியாக காணமுடிந்தது.

அரசு செலவில் அடக்கம் என்றால் எப்படி இருக்கும்? வைத்தியசாலை நிர்வாகம் அப்பகுதி கிராம சேவை அலுவலருக்கு சடலத்தைப் புதைக்கும்படி தகவல் அனுப்பும்.

கிராம சேவை அலுவலர் சடலத்தை பொறுப்பேற்று ஸ்கந்தபுரம் அக்கராயன் மயானத்தில் புதைக்கும்படி சில கூலித் தொழிலாளிகளிடம் ஒப்படைப்பார்.

அவர்கள் சடலத்தைக் கொண்டுபோய் நன்றாக ஆழமாக குழி வெட்டி புதைப்பார்கள் என்று தான் எதிர் பார்ப்போம்; ஆனால் நடப்பது என்ன? சடலத்தை அரை குறையாகப் புதைத்துவிட்டுப் போய்விடுவார்கள்.

நாய்களும் ஏனைய மிருகங்களும் சடலத்தின் உறுப்புகளை (கை கால்களை)இழுத்துக் கொண்டு போய் விடுகின்றன. சடலத்தின் உறுப்புகள் அங்கும் இங்குமாக சிதறிக் கிடக்கின்றன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் ஸ்கந்தபுரத்திலுள்ள கச்சேரியில் நடத்தும் அத்தியாவசிய குழுக் கூட்டத்தில் இது பற்றிப் பலர் குறிப்பிட்டு கண்டன குரல் எழும்பும் அளவுக்கு விடயம் போய்விட்டது.

### அரச அதிபர்

மாவட்ட அரசாங்க அதிபர் தில்லை நடராசாவும் குடும்பத்துடன் இடம் பெயர்ந்து கிராம அலுவலர் ஒருவரின் இல்லத்தில் ஸ்கந்தபுரத்தில் வசித்து வருகின்றார்.

மக்கள் அனுபவித்து வரும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் துரித நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணும் சேவை மனப்பான்மை கொண்ட அதிகாரியாக அவர் செயற்பட்டு வருகிறார்.

செவ்வாய்க்கிழமைகளில் நடத்தப்பட்டு வரும் அத்தியாவசிய சேவை குழுக்கூட்டத்தில் உள்ளூர், மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச திணைக்களங்களின் தலைவர்கள், பொது நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

மக்கள் எதிர்நோக்கும் முக்கிய குறைபாடுகள், பிரச்சினைகள், இடம்பெயர்ந்தோர் நிவாரணம், கல்வி, சுகாதாரம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இதில் கலந்து துரையாடப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப் படும்.

எடுக்கப்படும் முடிவுகள், தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதை அடுத்த கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தில்லை நடராசா சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டு உறுதி செய்து கொள்ளுவார்.

காலபோக நெற்செய்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எமது குடும்பத்தினரின் நினைவும் அஞ்சலியும்






தொல்புரம்
**விஸ்வநாதர் சின்னையா**
(நிலப்பிரபு-இளைப்பாறிய உதவி வைத்தியர்)
பிறந்த தினம்: **19-01-1896** (தொல்புரம்)
மறைவு: **13-12-1975** (குளுவான் மலேசியா)

**வள்ளியம்மை சின்னையா**
தோற்றம்: **01-08-1910** (பொன்னாலை)
மறைவு: **30-01-1942** (குளுவான் மலேசியா)


**வி. சின்னையாவின் மூத்த மருமகனும் மகளும்**



**கந்தையா பாலசுப்பிரமணியம்**
(லிகிதர், சுகாதாரப் பகுதி)
தோற்றம்: **07-01-1930**
மறைவு: **11-11-1988**

**பாலசுப்பிரமணியம் மகாலட்சுமி**
தோற்றம்: **17-12-1930** (குளுவான் மலேசியா)
மறைவு: **26-09-1970** (தொல்புரம்)

**வி. சின்னையாவின் மகனும் 2ஆவது மருமகனும்**





**வைத்திய கலாநிதி பாலகிருஷ்ணன் சின்னையா**
தோற்றம்: **12-04-1935** (பொன்னாலை)
மறைவு: **16-08-1993** (கோலாலம்பூர்)

**ஆறுப்பிள்ளை இராசநாயகம்**
(இளைப்பாறிய D.R. M. O., அனுராதபுரம்)
தோற்றம்: **03-10-1938**
மறைவு: **19-04-1996**

பிரிந்த குடும்பத்தினரை என்றும் நினைவு கொண்டு வாழும்:
**திருமதி லோ. இராசநாயகம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
(9179)

---

## தேவை

★ விற்பனை உதவியாளர்
★ படம் பிறேம் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள்
★ பெயின்டிங் செய்யக்கூடியவர்கள் தேவை.
நேரில் வரவும்.

தொடர்பு கொள்ள வேண்டியது:
**டில்கா பேணிச்சர் பலஸ்**
இல. 441, கே. கே. எஸ். வீதி,
வண்ணை சிவன் கோயில் சந்தி, யாழ்ப்பாணம்.
(9184)

---

## தேவை

### றோனியோ மெஷின்

புதிய அல்லது நல்ல நிலையிலுள்ள றோனியோ மெஷின் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**
39, 5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/3953)

---

## 18 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

மலர்வு: 19 — 01 — 1979



உதிர்வு: 09 — 07 — 1995

**செல்வன் செல்வராசா பிரதீஸ்**
**(பிரசாத்)**

மலர்ந்து உதிர்ந்த மலரானாய்
உதித்து மறைந்த ஆதவனானாய்
பிரசாத் !
நீ பிறந்து பதினாறு
ஆண்டுகள் தான் எம்மோடு வாழ்ந்தாலும்
உன் நினைவுகள் என்றும் அழியாது !

உன் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(9176)

---

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக அங்கத்தவர்
லயன்
**வேலுப்பிள்ளை சண்முகநாதன்**
[கொழும்பில் 14 - 01 - 97 இல் அமரத்துவம் எய்தினார்.]

வட்டூர் பதியினிலே வளத்துடன் நீருதித்து
வளமான கல்வியை இளமையிலே பெற்றுப் பின்
மட்டில்லாப் பெருமை கொள் இலங்கை வங்கியிலே
இணைந்திட்டீர்; உயர் பதவி பெற்றிட்டீர்.
உரும்பிராய் ஊரிலே உத்தமியைக் கைபிடித்து
உள மகிழ உதித்திட்ட நற் புதல்வர்களை
நல்லாக்கி வைத்திட்டீர்; நற் புகழ் தானடைந்தீர்.
நல்லை நகர் அரிமாக் கழகத்தில் தானிணைந்து
நற்சேவை ஆற்றிட்டீர்! நாடு புகழ் பெற்றிட்டீர்!
பொங்கல் திருநாளில் பொலிவுறு நன்னாளில்
எங்கள் 'சண்' எம்மைவிட்டு ஏன் பிரிந்தீர்?
உங்கள் நல்லான்மா நற்கதி அடைந்திட
எங்கள் கரங்கூப்பி இறைஞ்சுகிறோம் - இறையருளை!

**நல்லூர்லயன்ஸ்கழகம்**
தலைவர்,
அங்கத்தவர்கள்.
(கி/3955)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய பிராந்திய அமைதிக்கு சீனாவினால் அச்சுறுத்தலாம்

சிங்கப்பூர், ஜன. 19

''அடுத்துவரும் சில ஆண்டுகளில் ஆசியப் பிராந்தியத்தின் அமைதிக்கு சீனா அச்சுறுத்தலாக இருக்கும்.''

சிங்கப்பூரில் நடந்த இராணுவ வியூக வடிவாளர்கள் கருத்தரங்கில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

சீனா சமீப காலத்தில் கண்டிருக்கும் பொருளாதார வளர்ச்சி அபாரமானது. திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக ஒரு குழு மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர். அதே வேளையில் அரசியல் ரீதியாக ஒரு கட்சிச் சர்வாதிகாரமும் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையும் தொடர்கிறது.

பொருளாதாரச் செழுமையும் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையும் கைகோர்த்துச் செல்ல முடியாத இரு துருவங்களாகும்.

இந்த நிலை பல உள் முரண்பாடுகளையும் பதற்ற நிலையையும் உருவாக்கும். அத்தகைய உள் முரண்பாடுகளில் இருந்து மக்களைத் திசை திருப்ப சீன தேசியவாதத்தை ஆளும் அமைப்பு தூண்டி விடலாம்.

அதற்கு வசதியாக தாய்வான் மீது போர் தொடுத்து தாய்வானை சீனாவுடன் இணைக்கும் வேலைகளில் சீனா ஈடுபடலாம்.

இது ஆசியப் பகுதியில் தொடர் பதற்ற நிலையின் ஆரம்பமாக அமையலாம்.

இவ்வாறு சிங்கப்பூர் கருத்தரங்கில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

# முஜிபுர் படுகொலை விசாரணை விரைவில் ஆரம்பமாகும்

டாக்கா, ஜன. 19

பங்களாதேஷை உருவாக்கியவரும், அதன் முதல் பிரதமருமான முஜிபுர் ரஹ்மானை அவரது குடும்பத்தாரோடு 1975 இல் படுகொலை செய்தார்கள் — மற்றும் அந்தச் சதியில் பங்குபற்றியவர்கள் — மீதான குற்றப்பத்திரிகையை அந்த நாட்டுக் காவல்துறை நேற்று முன்தினம் நீதி மன்றத்தில் சமர்ப்பித்தது.

விசாரணைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா முஜிபுர் ரஹ்மானின் புதல்வி ஆவார்.

1975 ஆம் ஆண்டு முஜிபுர் ரஹ்மானின் குடும்பம் அழிக்கப்பட்ட போது ஷேய்க் ஹசீனா லண்டனில் படித்துக் கொண்டிருந்தபடியால் உயிர் தப்பினார். (இ-10)


பாடசாலைப் பிள்ளைகள், ஆண்கள், பெண்களுக்குரிய பாதணிகளை பெற்றுக் கொள்ள

"சரவணாஸ் பாட்டா"

83, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(44744)



## சமாதானத்துக்கான ஜெபம்

இறைவா!
அமைதியின் தூதுவனாய் என்னைப் பயன்படுத்தும்
பகையுள்ள இடத்தில் பாசத்தையும்
மன வேதனையுள்ள இடத்தில் மன்னிப்பையும்
ஐயமுள்ள சூழலில் விசுவாசத்தையும்
அவநம்பிக்கையுள்ள இடத்தில் நம்பிக்கையையும்
இருள் சூழ்ந்த உள்ளத்தில் ஒளியையும்
துயரம் நிறைந்த உள்ளத்தில் மகிழ்ச்சியையும்
வழங்கிட எனக்கு அருள் புரியும்.
தெய்வீக குருவே!
ஆறுதல் பெறுவதை விட ஆறுதல் அளிக்கவும்
பிறர் என்னைப் புரிந்து கொள்வதை விட
பிறரைப் புரிந்து கொள்ளவும்,
பிறருடைய அன்பை அடைய ஆசிப்பதை விட
பிறருக்கு அன்பு அளிக்கவும்
எனக்கு அருள்வீராக.
ஏனெனில்,
கொடுக்கும் பொழுது மிகுதியாய்ப் பெறுகிறோம்
மன்னிக்கும் பொழுது மன்னிப்பை அடைகிறோம்
மரிக்கும் பொழுது நித்திய வாழ்விற்குப் பிறக்கிறோம்
எனவே,
சுயநலமற்ற வாழ்வில் அமைதி காண்கிறோம்
ஆமென்.

— ஓர் அடியாள்

(44728)



## 90ஆவது நாள் நினைவஞ்சலி

### அமரர் சி. முருகேசன்

(முன்னாள் வட்டுக்கோட்டை பிரதேச சபை ஊழியர்)

அன்னை மடியில்: **1—12—1950**
ஆண்டவன் அடியில்: **22—10—1996**

கூடு கலைந்ததனால், தங்க இடமின்றி தவிக்குதையா
தாய்ப்பறவை, சேய்களெல்லாம் கலங்குதையா!
நீதியுள்ள இறைவன் நிச்சயம் தீர்ப்பிடுவார்
இச்செயற்கு.

22-10-96 அன்று மர்மமான முறையில் கொலையுண்ட எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிச்சடங்கில் கலந்து பல வகையிலும் உதவியவர்களுக்கு நன்றி கூறுவதோடு, நாளை 20-01-97 அன்று நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் பங்குகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், உறவினர்கள்.

நலநோன்பு நிலையம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு.

(44759)


# முடி உதிர்வதை தடுக்க சிரசாசனம்

மணிலா, ஜன. 19

தலையின் மேற் பரப்பில் உள்ள மிக நுண்ணிய இரத்த நரம்புகள் சுருங்கி போதிய இரத்த ஓட்டம் தடைபடுவதும் தலை முடி உதிர்வதற்கான ஒரு காரணமாகும்.

சிரசாசனத்தைத் தொடர்ந்து செய்வதன் மூலம் ஓரளவு இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்யலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (இ-10)

# கண்ணிவெடி தடை குறித்து பேச்சுவார்த்தை

வாஷிங்டன், ஜன. 19

நிலக் கண்ணி வெடிகளை சர்வதேச அளவில் தடை செய்வதற்கான கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஜெனிவா நகரில் காலதாமதமின்றித் தொடங்கப்பட வேண்டும் என அமெரிக்கா கேட்டுள்ளது. (இ-10)

# யெல்ட்ஸினின் நோய் ஆபத்தானது

மொஸ்கோ, ஜன. 19

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்ஸினுக்கு ஏற்பட்டுள்ள இரட்டை நிமோனியா நோய் ஆபத்தானதுதான் என கிரெம்ளின் மருத்துவக் குழு அறிவித்துள்ளது.

இதேவேளை யெல்ட்ஸினின் மனைவி நைனாவும் இத்தகைய காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)


## கலையகம்

ஆவரங்கால்

**A/L 97,98,99**

அளவையியல்

K. நவநீதன்

97- குறியீட்டு அளவையியல்
98, 99- எடுப்புக்கள்

நாடகமும் அரங்கியலும்

V. வளர்மதி

97- வினா-விடை வகுப்பு
(ஆரம்பத்திலிருந்து)
98- [illegible]
[illegible]

(44720)


# பொப்டோலுக்கு அதி உயர் விருது!

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் அதிபர் தேர்தலில் தனக்கு எதிராகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த குடியரசுக் கட்சிவேட்பாளர் பொப்டோலுக்கு அமெரிக்காவின் மிக உயர்ந்த சிவிலியன் விருதான ''சுதந்திரத்துக்கான அதிபர்'' விருதை வழங்கிக் கௌரவித்தார்.

''இந்த மண்ணின் புதல்வரும், குடிமகனும், இராணுவ வீரனும், சட்டப்பேரவை உறுப்பினருமான பொப்டோல் அமெரிக்க மக்களின் போராட்டங்கள், உணர்வுகள், செயற்பாடுகளை ஆழமாகப் புரிந்து கொள்ளத் தெரிந்தவர்'' என அதிபர் கிளின்ரன் குறிப்பிட்டார்.

# இந்தியாவின் தானியங்கி விமானம்

எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ள குடியரசுத் தின விழாவுக்கு இந்தியா தயாராகி வருகிறது.

இராணுவ அணி வகுப்பில் ''லக்ஷியா'' என்ற விமானம் இந்த ஆண்டின் சிறப்பு அம்சமாக இருக்கும்.

முற்றிலும் இந்திய தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட இந்தத் தானியங்கி விமானம் விமான ஓட்டி இல்லாமல் தானாகவே எதிரியின் பிரதேசங்களுக்குள் பறந்து சென்று எதிரியின் தளங்களை—குறிப்பாக ஆட்லறி மற்றும் விமானத் தளங்களை— படம் பிடிக்கும்திறன் கொண்டது.

எதிரியின் ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து தப்பிக் கொள்ளும் திறனும் இந்த ''லக்ஷியா'' தானியங்கி விமானத்துக்கு உள்ளதாம். (இ-10)

# கிளிநொச்சியில் வாழ்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குத் தேவையான உரத்தை கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொண்டுவருவதில் கொழும்பிலுள்ள அமைச்சு அதிகாரிகளுடனும் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகளுடனும் அவர் நேரடியாக பலதடவை சென்று வலியுறுத்தியதன் பேரில் 750 மெற்றிக் தொன் ரி. டீ. எம், பி, ஆகிய உரங்கள் கிடைத்தன.

ஆனால் நெற் பயிருக்கு மிகவும் தேவைப்படும் உரங்களான யூரியா, அமோனியா உரவகைகளை அனுப்புவதில் பாதுகாப்பு அமைச்சு உறுதியாக நின்று தடை செய்து விட்டது.

### பெரும் இழப்பு

''சத்ஜெய'' இராணுவ நடவடிக்கையினால் நெற்செய்கைக்கு விவசாயத் துறைக்கு ஏற்பட்ட இழப்பு அளவிட முடியாதது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் இன்று செய்கை பண்ணப்படாது தரிசாகக் கிடக்கின்றன.

விவசாயிகளின் இடம்பெயர்வால் பரந்தன், முரசுமோட்டை, உருத்திரபுரம், திருவையாறு, பரவிப்பாஞ்சான், கனகாம்பிகைக்குளம இரணைமடு ஆகியபல பகுதிகளில் நெற் செய்கை பெரிதும் பாதிக்கபட்டுள்ளது.

இரணைமடுக் குளத்திலும் ஏனைய குளங்களிலும் இம்முறை நிறைவான தண்ணீர் இருந்தும் அதனை பிரயோசனப் படுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை இடம்பெயர்ந்தவர்களில் சிலர் தாங்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் காணியை குத்தகைக்கு எடுத்து மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மானாவாரியாக கச்சான், கௌபீ, உழுந்து, பயறு போன்ற சிறு தானிய செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், ''ரெக்'' எனப்படும் பொருண்மிய மதியுரை நிறுவனம் என்பனவற்றிற்கு ஊடாக கெயர் நிறுவனம், யூ என் ஏச். சி. ஆர் (UNHCR) நிறுவனம், போரூட் நிறுவனம் என்பன விவசாயிகளுக்கு பல்வேறு சுழற்சி முறையிலான கடன் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றன.

யாழ். மாவட்டத்திலிருந்து அப்பிராந்தியத்திற்கு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து சென்றவர்களில் பலர் மலேரியா நோய்க்கும், செங்கண்மாரி, நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களுக்கும் ஆளாகி போதிய வைத்திய வசதிகளைப் பெறமுடியாது தங்கள் பிள்ளைகளின் கல்வியைத் தொடர முடியாது துன்பச் சுமைகளை நெஞ்சங்களில் சுமந்த வண்ணம் வாழவேண்டிய அவல நிலையில் இருந்து வருகின்றனர்.

ஆனால் அம் மாவட்டத்திலுள்ள நிரந்தர குடி மக்களில் பலர் ''முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்'' என்ற முதுமொழிக்கு இணங்க பல்வேறு கஷ்ட நஷ்டங்கள் இருப்பினும் துவண்டு போய் விட வில்லை. குறைந்த வளங்களைக் கொண்டு நிறைந்த பயன்களை பெற முயற்சித்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.

மலேரியா நோய் போன்ற நோய்களின் தாக்கங்களுக்கு பழக்கப்பட்டவர்கள் அவர்கள்.

### அரச சார்பற்ற நிறுவனங்கள்

இதே வேளை வெளிநாட்டு, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு தங்களால் இயன்ற நிவாரண பணிகளை ஆற்றி வருகின்றன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் (UNHCR) நல்ல தரமான கூரை விரிப்புகளை வழங்கிய போதிலும் சகல இடம்பெயர்ந்தவர்களுக்கும் அவை கிடைக்கவில்லை.

நிவாரணப் பொருள்களை அரசு சார்பற்ற நிறுவனங்கள் விரும்பியவாறு கொண்டு வந்து விநியோகிப்பதற்கு அரசாங்கமும் கூட்டுப் படைத் தலைமையகமும் பலத்த கட்டுப்பாடுகளை விதித்து வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் பல பொருள்களுக்கு படையினர் தடை விதித்துள்ளதால் கிளிநொச்சி மற்றும் வன்னிப் பிராந்தியத்தில் பொருள்களின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. ஒரு சைக்கிள் ரயர் ரியூப் தற்போது 1,200 ரூபா வரை விற்கப்படுவதால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாதாரணமாக கிடைக்கும் ''பனடோல்'' கூட அதிகரித்த விலையில் ஒன்று எட்டு ரூபா வரை தற்போது விற்கப்படுகிறது.

இல்வாறான கஷ்டங்களிலிருந்து தங்களுக்கு விமோசனம், விடிவு ஏற்படாதா என்று வன்னி வாழ் மக்கள் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு:இல.15,மெமோரியல் வீதி, மானிப்பாய். (மெமோரியல் ஆங்கிலப்பாடசாலை முன்பாக) (44734)

ஐம்பது ரூபாவுக்கு விற்பனையாகும் ''அற்லஸ்'' மலிவு விலையில் இருபது ரூபா. தரமான சஞ்சிகைகள், பழைய நூல்கள் விற்பனைக்கு. ஜோஸ்யர் இரண்டாவது இதழ் வெளியாகியுள்ளது. ஜோஸ்யர் பழைய புத்தகக்கடை, 308, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9181)

பாலைத் தீராந்திகள், பனைமரங்கள், கப்புகள், கண்டாவளை மண், அஸ்பெஸ்டஸ்சீற், ரியூட்டரி வாங்கு, மேசை விற்பனைக்கு உண்டு. விவரங்கட்கு:- திருமதி மு. கனகேஸ்வரி இல. 7, புகையிரத வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (44750)

இறைச்சிக் கோழிகள் (புறொயிலர்) விற்பனைக்குண்டு. இல. 141 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (44743)

## வாடகைக்கு

யாழ். நகரில் அறைகள் வாடகைக்கு உண்டு. நிரந்தர தொழில் செய்பவர்களுக்கு. வாடகை 300/-. ஜெயந்தி ஸ்ரோர்ஸ், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி) (44717)

## ஆண்டு 4 – 11

புலமைப்பரிசில் ஆண்டு 5 (தமிழ், கணிதம், ஆங்கிலம்), மற்றைய வகுப்புக்களுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் உயர்ந்த பெறுபேறுடைய Lond. Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி. (44965)

## MATHS

வீட்டில் இருந்தவாறு தபால் மூலம் பயின்று O/L 97இல் திறமைச் சித்திபெறத் தேவையான அலகுகள் அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படும். விவரங்களுக்கு: திருமதி சி. குலசேகரம், சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். (91 66)

# தொலைபேசி கட்டணம் உயரும்

கொழும்பு, ஜன. 19

எதிர்வரும் பெப்ரவரி 1ஆம் திகதி தொடக்கம் தொலைபேசிக் கட்டணங்களை 45 வீதத்தால் அதிகரிப்பதென 'ரெலிகொம்' நிறுவனத் தகவல்கள் தெரிவிப்பதாக 'திவயின' பத்திரிகை தெரிவிக்கின்றது. (இ-10)

# உளவியல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜன 19

இலகு முறையில் கற்றலுக்கான உளவியல் பயிற்சிநெறி ஒன்று விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் மருத்துவமனை வீதியிலுள்ள 'சுகவாழ்வு' நிலைய காரியாலயத்தில் திங்கள், வியாழன் தவிர்ந்த நாள்களில் காலை நேரத்தில் இப்பயிற்சி தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறலாம் என்றும் 'சுகவாழ்வு' இணைப்பாளரால் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (இ-5)


## ST. LUKE'S METHODIST HOSPITAL, PUTTUR.

**WANTS**

A DOCTOR ( Preferably a Christian )
QUALIFIED NURSES
MID WIFE
TRAINEE NURSES.

Apply immediatly to the Manager.

"SOLOMON HOUSE"
120, Second Cross Street,
Jaffna.

(44737)


# விற்பனைக்கு

S
30 S S S
கைத்தறி நெசவுக்குரிய 2, 16, 40, 50, நூல்கள், 10 H.P., 8 H.P., டீசல் என்ஜினுக்குரிய கிறாங், கவணவீல், நொசில், எலிமென்ட், றிங்ஸ், பியறிங், காஸ்கற், போர், சிலிவ் ஆகியன விற்பனைக் குண்டு.

**ஸ்ரீராஜ் றெக்ஸ்ரைல்ஸ்**

வட்டு. கிழக்கு, சித்தன்கேணி.

(44756)

# முதலாம் ஆண்டு நினைவலை



மண்ணுக்கு: 10 — 07 — 1901

விண்ணுக்கு: 19 — 01 — 1996

அமரர்

## சந்தியாப்பிள்ளை சவரிமுத்து

(ஓய்வுபெற்ற யாழ். ஆயர் இல்ல ஊழியர்)

சில்லையம்பதிதனில் சீராய் வந்துதித்து
சிறப்புற யாழ். ஆயர்மனை தொழில் ஏற்று
ஆயராம் ஆண்டகை கியோமாருடன் வாழ்ந்து
ஆர்வமுடன் அவர் இறுதிவரை பணியாற்றி
சீராக ஒய்வு பெற்று வாழ்ந்திடுங்கால்
சீற்றமுடன் வந்ததுவோ இடப்பெயர்வு
தரவில்லை பிறந்த மண் இடம் உனக்கு
தந்ததுவே மிருசுவில் மண் இடம் உனக்கு
தீராத நோயோடு போராடிச் சென்றீர்கள்-ஐயா
தீராது எம் கவலை உன் பிரிவால்.

இவரின் பிரிவால் துயருறும்;

**மனைவி, பிள்ளைகள்.**

(44747)

# கேள்வி அறிவித்தல்

## கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம், வலயம் - 01.

**தேசிய பாடசாலைகள் - யா/யாழ். மத்திய கல்லூரி.**
**யா/வேம்படி பெண்கள் உயர் பாடசாலை.**

மேற்படி இரு தேசிய பாடசாலைகளிலும், கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாணம் வலயம் 01 கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1997 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி மு. ப. 10. 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு. ப. 10. 30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| கேள்வி விவரம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம். | மீளளிக்கப்படாத வைப்புப் பணம். | விண்ணப்பதாரரின் பதிவுத் தரம். |
|---|---|---|---|
| **1. யா/யாழ். மத்திய கல்லூரி** | | | |
| அ. தம்பர் மண்டபத்திற்கு அவசர திருத்த வேலைகள் மூன்று மாடிக் கட்டடம் 110'x37' ; 59'x25' | 7, 800/- | 500/- | 05 (கீழ்) |
| ஆ. 130' x 25' மூன்று மாடிக் கட்டடத்திற்கு அவசர திருத்த வேலைகளும் கூரை வேலைகளும் சிமித் கட்டடத் தொகுதி. | 4, 100/- | 500/- | 05 (கீழ்) |
| **2. யா/வேம்படி பெண்கள் உயர் பாடசாலை.** | | | |
| அ. மேபல் தம்பையா மாடிக் கட்டடத்திற்கு அவசர திருத்த வேலைகள். | 13, 500/- | 500/- | 05 (மேல்) |
| ஆ. மூன்று மாடிக் கட்டடத்திற்கு 200'x25' அவசர திருத்த வேலைகள். | 4, 675/- | 500/- | 05 (கீழ்) |

மேற்படி வேலைகளுக்கு 05 ஆம் தரத்திற்கு மேற்பட்ட ''இக்ராட்'' (ICTAD) நிறுவனத்திற் பதிவு செய்து கொண்டவர்களும், இத் திணைக்களத்தில் முன்னரே பதிவு செய்து கொண்டவர்களும் இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவராவர்.

வேலைகளுக்கு அமைவாக மேற் சொல்லப்பட்ட கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் வைப்புச் செய்து, கேள்விப் பத்திரங்களை 1997-01-21 ஆம் திகதியிலிருந்து 1997-01-27 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரை கல்வித் திணைக்களப் பாடசாலை வேலைகள் கிளையிற் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்கள் இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இ. சிவானந்தன்**
**கல்விப்பணிப்பாளர்**
**யாழ். வலயம் 01.**
97-01-19

கல்வித் திணைக்களம்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3954)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 15 — 07 — 1927

மறைவு: 21 — 12 — 1996

திருமதி

## கமலவதி சிவசுப்பிரமணியம்

**திதி: 20 - 01 - 1997**

வையகத்தில் நாம் இனிதாய் வாழ்வதற்காய் ஓயாமல்
செய்கருமம் அத்தனையும் சீராகச் செய்து வந்த
பெய்மழையே! எம்குடும்பப் பேரொளியே! நாம் வணங்கும்
தெய்வமே! சென்றீரோ தேடமுடி யாவிடத்தே.

அன்னாரின் இறுதிக் கிரியைகளிற் பற்குபற்றி எம் துயர் ஆற்றிய உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் எம் நன்றியைத் தெரிவிப்பதோடு, 20-01-97 இல், இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டியிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்.**

சி. ரவீந்திரன் – கிராம அலுவலர்,
புலோலி வடக்கு (மகன்),

உசனை வளவு, மணல் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

(44755)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தாவர வளம் அழிகிறது!

கோபம் வந்துவிட்டால் சிலர் மற்றவர்களைப் பார்த்து, ''நீ என்ன, மனிதனா, மரமா, மாடா; இந்த வேலை செய்திருக்கிறாய்?'' என்று ஏசுவது உண்டு.

ஆனால் பேசமுடிந்தால் மனிதனைப் பார்த்து மரங்களும், மாடுகளும் ''நீ மனிதனாகப் பிறந்ததில் என்ன பயன்? எங்களை வெட்டி அழிப்பது தானா உனது குணம், தொழில்? நீ அற்பனாகி விட்டாயே!''-என்று ஏளனம் செய்து திட்டித் தீர்க்கும் காலமாகி விட்டது இப்போது!

மனிதனுக்கு, அவனது வாழ்க்கைக்கு உதவுதற்கு இயற்கை தந்த வளங்களில் மரங்கள் என்று நாம் சொல்லும் தாவரங்களும், மிருகங்களும் பிரதானமானவை.

தாவர வளத்தை அழித்தால், மழை பொய்க்கும். மழை பொய்த்தால் மனிதன் உட்பட உயிர்வாழ்வன செத்து மடிய நேரிடும்.

இதனைச் சற்றும் உணராதவர்களாக எமது பிரதேச மக்கள் மனம் போனபோக்கில் மரங்களைத் தறித்து எறிகிறார்கள்.

அறுபதுகளில் இஸ்ரேலிய நிபுணர்கள் குடாநாட்டுக்கு வருகை தந்து சில நீரியல் ஆய்வுகளை நடத்திவிட்டு, யாழ்ப்பாணம் இன்னும் இருபத்தைந்து வருடங்களில் வனாந்தரமாகி விடும் என்று எச்சரித்துவிட்டுப் — பயமுறுத்திவிட்டுப் — போனார்கள்.

ஆண்டவன் கொடையால் அதிர்ஷ்டவசமாக, இதுவரை அப்படியாகவில்லை. ஆனால் அந்த எச்சரிக்கையை உண்மையாக்கி விடுகிறோம் என்று வரிந்து கட்டிக் கொண்டு செயற்படுகிறார்கள் எமது மக்கள்!

போரினால் கடந்த ஆறு வருடங்களில் குடாநாட்டின் தாவர வளம் ஐம்பது சதவீதத்திற்கு மேலாக அழிக்கப்பட்டு விட்டது.

அது போதாதென்று இப்போதும் மரங்களை மனக் கூச்சமின்றி வெட்டித் தள்ளுகிறார்கள்; தறித்து அழிக்கின்றார்கள்.

பாதுகாப்புக் காரணங்களைக் கூறி, வீதியோர மரங்களின் கொப்புகளை வெட்டுமாறு தான் படையினர் கூறினார்கள். ஆனால் எம்மவர்கள் மரங்களையே வேரோடு வெட்டிச் சாய்த்து விறகாக்குகிறார்கள்!

விறகு வியாபாரிகள் மர ஆலைக்காரர்கள் தாமே வீடு வீடாகச்சென்று மரங்களைத் தறிக்குமாறு வீட்டுக்காரர்களை உற்சாகப்படுத்தி, அவற்றைச் சாய்த்துத் தமது தொழிலைப் பெருக்கிக் கொள்கிறார்கள், பல இடங்களில்!

மீளக்குடியமராதவர்களின் வீடுகளில் உள்ள பயன்தரு மரங்களும், விருட்சங்களும் வெட்டி வீழ்த்தப்பட்டு விறகாக்கப்படுகின்றன.

கொப்பில் நின்று கொண்டு மரத்தைத் தறிக்கும் தற்கொலைத் தனம் என்பதனை எமது மக்கள் எப்போது உணரப் போகிறார்கள்?

குடாநாட்டை விட்டு மக்களிற் பெரும்பாலானோர் வேறு மண் தேடி ஓடுவதால் இது வனாந்தரம் ஆகினாலும் பரவாயில்லை என்று எண்ணுகின்றார்களா?

மரவள அழிப்பைத் தடுப்பதில் சிவில் நிர்வாகத்துக்குப் பங்கில்லையா? பொறுப்பில்லையா?

# இராணுவ தந்திரோபாயத்தில் அரசுக்குப் பெரும் தோல்வி!

## ரணில் கருத்துத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

இராணுவத் தந்திரோபாயத்தில் அரசுக்குப் பெரும் தோல்வி என்று கருத்து வெளியிட்டிருக்கின்றார் எதிர்க் கட்சித் தலைவரும் ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

சில தினங்களுக்கு முன்னர் நாவின்ன பகுதியில் இளைஞர் மாநாடு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த யுத்தம் அரசியல் நோக்கங்களுக்காகவே நடத்தப்படுகின்றது; இராணுவ நோக்கங்களுக்காக அல்ல.

யுத்தம் முடிவதற்கு பல காலக்கெடுக்களை அரசு கூறி வந்தது. ஆனால் அவை எல்லாம் தோல்வியில் முடிந்து விட்டன.

யுத்தம் முடிந்ததும் நாடு செழிக்கும் என்று அரசு திரும்பத் திரும்பக் கூறியது. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் கிழக்கில் பயங்கரவாதத்தை ஒழித்து ஸ்திர நிலை ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அந்தத் தந்திரோபாயத்தைக் கைவிட்டு புலிகளுடன் பேச்சு நடத்தச் சென்றது. விளைவு என்ன?

புலிகள் பல்வேறு தாக்குதல்களை நடத்தி பல நூற்றுக்கணக்கான படையினரைக் கொன்றனர்.

இராணுவத் தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் இராணுவத்தைக் குறை கூற முடியாது. அரசுதான் இராணுவத் தந்திரோபாயத்தில் தோல்வி அடைந்து விட்டது.

யுத்தத்தை ஒரு தட்டில் வைத்து புலிகளுக்குப் பரிசாக வழங்கியதுதான் இந்த அரசின் ஒரேயொரு சாதனை ஆகும்.

ரூபவாஹினியின் துணையுடன்தான் அரசு இன்று யுத்தம் நடத்துகின்றது. யாழ். நகரைக் கைப்பற்றும் யுத்தத்தை 'பந்துக்குப் பந்து' நேர்முக வர்ணனையாக அரசு ஒளிபரப்பியது. இது எல்லாம் எதற்காக?

மக்களைத் திசை திருப்பவே இந்த யுத்தம் நடத்தப்படுகின்றது. யுத்தத்தைத் தீவிரப்படுத்தி — இன்னொரு முறை மக்களை ஏமாற்றி — உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதே அரசின் திட்டம். — என்றார். (உ-150)

### குளத்தில் மூழ்கி சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 19

தாமரைப் பூ பிடுங்கச் சென்ற சிறுவன் குளத்தில் மூழ்கி மரணமான சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் இடம் பெற்றது.

துரைஹரன் (வயது 12) என்பவரே இறந்தவர் ஆவார். (இ)

## விமான - கப்பல் பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 19

விமானம் மூலம் கொழும்புக்கு பயணம் செய்ய யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்தவர்களில் ஒரு தொகுதியினருக்கு அனுமதி கிடைத்துள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

கப்பலில் பயணம் செய்ய ஏற்கனவே விண்ணப்பித்து, பின்னர் விமானம் மூலம்செல்வதற்காக தமது பெயர்களை மாற்றியவர்களில் பட்டியல் இலக்கம் 273, 274, 275, 276, 277 ஆகியவற்றுக்கான அனுமதியே தற்போது கிடைத்துள்ளதாகவும் —

இப்பட்டியலில் பெயர் உள்ளவர்கள் சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவுசெய்து தமது பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் —அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை செல்லவுள்ள கப்பல்களில் பயணம் செய்யவுள்ளவர்களின் பதிவுகளைச் செய்வதற்காக இன்று நண்பகல் வரை யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### மிதிவெடியில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெருப் பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவமொன்றில் ஒருவர் காயமடைந்தார்.

நல்லூர் வடக்கைச்சேர்ந்த தவராசா தயானந்தன் (வயது 16) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

வளவைத் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது மண்வெட்டியில் சிக்கி மிதிவெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

### செம்மணி இந்து மயான சபை

யாழ்ப்பாணம், ஜன. 19

செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10 மணிக்கு 374, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரியில் நடைபெறவிருப்பதாக அந்தச் சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# மெய்யான சமாதானத்துக்கு சிந்தனையில் மாற்றம் வேண்டும்

நாம் ஒவ்வொருவரும் சிந்தனையில் மாறவேண்டும். நல்ல சிந்தனைகளால் எம் அகத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். தன்னை நினைத்து வருந்தி தன் பிழை உணராத ஒருவரின் வாழ்க்கை அர்த்தமற்ற வெறும் சூனியமாகி விடும்.

இதற்கு அடிப்படை மாற்றம் தேவை. இந்த மாற்றமானது சூழ்நிலை மாற்றமோ அல்லது உறவினர் மாற்றமோ அல்ல. அப்படியானால் அந்த அடிப்படை மாற்றம்தான் என்ன?

அந்த மாற்றமே ''மன மாற்றம்''

நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தன்னுடைய பணியை ஆரம்பிக்கின்ற போது முதன் முதலாகச் சொல்லுகின்ற வார்த்தையை, மாற்கு ஆசிரியர் மிகவும் விவரமாகத் தருகின்றார்.

அதாவது மாற்: 1: 15. மொனகன் விவிலிய மொழி பெயர்ப்பின்படி —

''காலம் நிறைவேறியிருக்கிறது. கடவுள் ராஜ்யம் சமீபித்திருக்கிறது. மனந்திரும்பிச் சுவிசேஷத்தில் நம்பிக்கை வையுங்கள் என்றார்''.— என்பதாகும்.

இப்போது காலம் வந்து விட்டதே; அந்தக் காலம் தான் இப்பொழுது எம்மைச் சுற்றி இருக்கின்ற சூழ்நிலை. ஆகவே இங்கு இயேசு எமக்கு சொல்லும் செய்தி இன்று வரை பரிபூரணத்துவமானதும் நிலைபேறுடையதுமான செய்தியாக மிளிர்கின்றது.

சூழ்நிலையை, காலத்தைப் பிழை கூறியது போதும் இது தான் எமது சூழ்நிலை என அறிந்த பின்பும் இன்னும் தான் எங்கள் மனங்களில், சிந்தனைகளில் மாற்றம் துளியேனும் வந்ததாகத் தெரியவில்லை.

இந்த மன மாற்றம் எங்கு நடைபெற வேண்டும்? எமது சிந்தனையிலேயே முதலாவது மாற்றம் ஏற்பட வேண்டும் என்று இயேசுஎதிர்பார்க்கின்றார். சிந்தனை மாற்றமே மனமாற்றமாகத் துலங்கும். எபிரேயப் பதத்தில் ''முற்றாகத் திரும்புதல்'' என்று அர்த்தம் கொள்ளும்.

எமது சிந்தனையில் ஒரு திருப்பம் ஏற்படுகின்ற போதே, நாம் யாவரும் எவ்வித வேறுபாடும் இன்றி மெய்யான சமாதானத்தை அனுபவிக்க முடியும். இவ்வகையான மனமாற்றத்தையே இயேசு பெருமான் எதிர்பார்க்கிறார்.

இயேசு தனது பணியின் ஆரம்பத்தில் இதை வலியுறுத்தியதற்குக் காரணம் உண்டு. போராட்டம், பிணக்கு, ஒற்றுமையின்மை பல சமயக் கோட்பாடுகள், அசையும் மன இயல்புகள், பொல்லாத வியாதிகள், இவ்வகையான ஒரு சூழமைவுக்குள் தனது பணியைச் செய்யப்போகின்றேனே என்று எண்ணி இயேசு பின் நிற்கவில்லை. அந்தச் சூழ்நிலையை வெல்லவேண்டும் என்று எண்ணுவதன் விளைவாக சிந்தனையில் தெளிவும், மாற்றமும் உருவாகும். அதன் மூலம் மனமாற்றம் உதிக்கும். மனமாற்றம் உதிக்கும் போது மெய்யான நற்செய்தியை விசுவாசித்து மெய் இறைவனை உணரும் இயல்பு பிறக்கும். இவ்வகையான மாற்றங்கள் எம்மை மேற்கூறப்பட்ட சூழ்நிலையை முறியடித்து, ஏசாயாதீர்கனின் உரைப்படி, சிங்கமும் பசுவும் ஒருமித்து இருக்கின்ற சந்தோசமான சூழ்நிலை வரும்.

ஆகவே, ஒவ்வொருவரும் தமது நெஞ்சைச் சீர்தூக்கிப் பார்க்குமாறு முதலில் கேட்க வேண்டும். உங்கள் நெஞ்சம் சிந்தனையில் மாறியுள்ளதா, நீங்கள் வாழும் சமூகத்துக்குள் ஒற்றுமையை வளர்க்கின்றீர்களா, அல்லது பிணக்கை வளர்க்கின்றீர்களா? – என்று அளவிட்டுப் பாருங்கள்.

### ஞாயிறு நற்பிரசாதம்

வெள்ளை நிற மல்லிகையோ; வேறெந்த மாமலரோ; வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ; வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல; உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது. —என்றார் விபுலானந்த அடிகளார்.

எனவே —

மாறுவோம் சிந்தனையில்.

மிளிர்ந்திடுவோம் தூய உள்ளத்தால்.

புரிந்திடுவோம் இயேசுவின் செய்தியை. ★

— போதகர்

கு. ஐ. குமரேசன்

### நாளை

**தை 7**

**திங்கட்கிழமை**

**திதி:** துவாதசி

பிற்பகல் 5. 16வரை.

**நட்சத்திரம்:** மிருகசீரிடம் பின் இரவு 4.44 வரை.

ராகுகாலம்: 8.05-9.35

சுபநேரம்: 12.35-2.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### சமய சந்நிதிகளில்

சுழிபுரம் குடியிருப்பைச் சேர்ந்த ஓடையம்பதி ஸ்ரீ பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர தேவஸ்தான பாலஸ்தாபனம் நாளை திங்கட்கிழமை காலை 6.37 முதல் 7.13மணி வரையிலுள்ள சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. (இ)

★ ★ ★

மாதகல் புனித செபஸ்தியார் ஆலயத்தின் பெருவிழா இன்று கொண்டாடப்படவுள்ளது. இன்று காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலியும், திருச்சுரூப பவனியும் இடம் பெறும். (இ-5-30)

★ ★ ★

கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாக பூஷணி அம்பாள் ஆலய மணவாளக் கோல திருவிழா இன்று நடைபெறும். காலை 9.00 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் 12.00 மணிக்கு பொங்கல் பூசையும் மாலை 3.00 மணிக்கு நவ சக்தி அர்ச்சனையும் நடைபெறவுள்ளன. (இ-5)

### மேசன் - தச்சு தொழிற் பயிற்சி

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை ஊடாக யாழ். மாவட்டத்தில் மேசன், தச்சு தொழிற்பயிற்சி பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக தேசிய கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை மாகாண முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் 16-25 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், 7 ஆம் தரம் சித்தியடைந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சுக் குழுவின் விசாரணை நேற்று ஆரம்பம்

## 20 பேர் காங்கேசன் அழைத்துச் செல்லப்பட்டனர்

கொழும்பு, ஜன. 19

யாழ். மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சுக்குழு நேற்று காங்கேசன்துறையில் விசாரணைகளை ஆரம்பித்தது,

இந்தவிசாரணையில் சாட்சியமளிப்பதற்கு 60 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

அவர்களில் இருபது பேர் சாட்சியமளிப்பதற்காக யாழ்ப்பாணம் செயலகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

விசாரணைகள் தொடர்ந்தும் இன்றும் நாளையும் நடைபெறும்.

இன்று சாட்சியமளிக்க இருப்போரை இன்று காலை 6.30 மணிக்கும் —

நாளை சாட்சியமளிக்க இருப்போரை நாளைக் காலை 6.30 மணிக்கும் —

யாழ். செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு யாழ். சிவில் நிர்வாகப் பிரிவு கேட்டுள்ளது.


I. A. B.

LONDON ACCOUNTANCY EXAM JUNE 97

சகல பிரிவுகளுக்குமான வகுப்புகள்

ஆரம்பம்: 25-01-1997

விவரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

2nd Cross Street, Jaffna.

(44770)



யாழ். மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி....

மீண்டும் யாழ். நகரில்!

கணிதம்: திரு. B.P. பாஸ்கரன்

ஆரம்பம்: 15-02-1997

எடிசன் அக்கடமி

(யாழ், இந்து அருகில்)

411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(44771)


## கண்ணீர் அஞ்சலி

பிரபல வர்த்தகரும் கலட்டி கற்பக விநாயகர் ஆலய நிர்வாகசபை உறுப்பினருமாகிய

### சீவரெட்ணம் உதயகுமார்

(கலட்டி கண்ணன்)

அவர்களின் அகால மரணத்தால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கலட்டி கற்பக விநாயகர் ஆலய நிர்வாகத்தினர்.

(9187)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இராசம்மா

மாவிட்டபுரம் தெல்லிப்பளையைச் சேர்ந்த நாகலிங்கம் இராசம்மா சங்கானையில் காலமாகிவிட்டார்.

அன்னார் மாரிமுத்து நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், சாவித்திரி, சின்னத்தம்பி, செல்வராசா, அமரர் ராமநாதன், திருச்செல்வம் (ஆஸ்திரேலியா), மங்களேஸ்வரி (கனடா), கோபாலகிருஷ்ணன், குணேஸ்வரி (கனடா), பாலகிருஷ்ணன் (ஆஸ்திரேலியா) பத்மராணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-1-97) ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
நா. சின்னத்தம்பி
நா. கோபாலகிருஷ்ணன் (மகன்)

தற்போதைய முகவரி:
சாளி கோயிலடி,
சங்கானை.

(44769)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

## திருத்த வேலை

யாழ். சின்னக்கடையின் மீன்சந்தையில் அவசர திருத்த வேலைகள் யாழ். மாநகர சபையின் வேலைப்பகுதியால் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் மீன்வியாபாரம் சின்னக்கடையில் கிழக்குப் புறமாகவுள்ள வீதி ஓரங்களில் நடைபெற்று வருகின்றது. (இ-51)

## பாலர் பாடசாலை

யாழ். பரி.யோவான் ஆலய பாலர் பாடசாலை முன்னர் இயங்கிய பழைய இடமான யாழ். பரி.யோவான் ஆலய வளவில் மீண்டும் இயங்க உள்ளதாக யாழ். அங்கிலிக்கன் திருச்சபையின் மதகுரு அருட்திரு செ. பி. நேசகுமார் தெரிவித்தார்.

இந்த பாலர் பாடசாலை தற்போது யாழ். சென் ஜோன்ஸ் அக்கடமியில் இயங்கி வருகிறது (இ-51)

## தேசிய மனித.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவும் ஒருவர் தமிழராகவும் ஒருவர் முஸ்லிமாகவும் இருப்பார்.

சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் ஆலோசனையுடன் ஆணையாளர்களை ஜனாதிபதி நியமிப்பார்.

— இவ்வாறு சட்ட ஏற்பாடுகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஆணையாளர்களாக நியமிக்கப்படக் கூடியவர்களின் பெயர்களை சிபாரிசு செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கேட்டிருந்தார்.

அக் கோரிக்கைக்கு இணங்க சிலரின் பெயர்களை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்திருப்பதாக அறியவருகிறது.

சபாநாயகரின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு ஆணையாளர்களை ஜனாதிபதி அடுத்த சில தினங்களில் நியமிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-150)

## அரசியல்...

( 1ஆம் பக்கத்தொடர்ச்சி)

துடைய சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தி தொடர்ந்தும் விடுதலைப் புலிகளால் யுத்தத்தை மேற்கொள்ள முடியாது; சிறிலங்கா இராணுவத்தின் யுத்த சக்திக்கு முன்னால் — சுமார் ஏழாயிரம் அல்லது எட்டாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட — விடுதலைப் புலிகளால் இந்த நீண்ட காலப் போருக்கு தாக்குப் பிடிக்க முடியாது; அவர்கள் விரைவில் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படுவார்கள்.

விடுதலைப் புலிகளிடமிருந்து பாரிய நிலப்பிரதேசத்தை அரச படைகள் கடந்த வருடம் மீட்டெடுத்தன புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் முக்கிய பகுதிகள் இந்த ஆண்டுக்குள் பூர்த்தியாகி விடும்.

யுத்தத்தை தனியே இராணுவ நடவடிக்கைகளின் மூலம் முடிவுக்கு கொண்டுவர முடியாது என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

தற்போது தமிழ் அரசியல் கட்சிகளைப்போலவே பெரும்பான்மை இன மக்களுக்கும் சமாதானம் தேவையான ஒன்றாகிவிட்டது — எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (உ-150)

## கைதாகி பிணையில் விடப்பட்ட

# இஸனி விக்கிரமசிங்க அரசியலில் குதிப்பார்?

கொழும்பு, ஜன. 19

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் பத்திரிகையாளரான இஸனி விக்கிரமசிங்க அரசியலில் குதிக்கவிருப்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

தனியார் ஒளிபரப்பு நிறுவனம் ஒன்றின் செய்தி ஆசிரியரான இந்தப் பெண்மணி, வெல்லாவெளி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தொடர்ந்து தாக்கப்படுகின்றது என்ற செய்தியை அந்த நிறுவனம் ஒளிபரப்பியதற்காக கைது செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் நெருங்கிய உறவினரான இவருக்கு கடந்த பொதுத்தேர்தலின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் —

ஆனால் அதனை அவர் ஏற்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் எம். பியான அஸித பெரேராவின் மனைவியான இஸனி, அனேகமாக கெஸ்பாவ தொகுதியில் தனது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பார் என 'லக்பிம' பத்திரிகை தெரிவித்தது.

# இஸனி கைதானது அரசின் முடிவல்ல என்கிறார் ஜனாதிபதி

கொழுப்பு, ஜன. 19

இஸனி விக்கிரமசிங்கா பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதை தன்னால் ஏற்றுக் கொள்ளமுடியாது என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் தாம் நாட்டில் இல்லை எனவும் —

இஸனி விக்கிரமசிங்கா கைதானது அரசின் முடிவின்படி மேற்கொள்ளப்படவில்லை. அது முற்றிலுமாக பொலீஸாரின் முடிவின்படியே மேற்கொள்ளப்பட்டது என்றும் — ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய தொடர்பு சாதனங்கள் யுத்தம் தொடர்பான தகவல்களை பொறுப்பற்ற விதத்தில் வெளியிடுவதாக குற்றஞ்சாட்டிய ஜனாதிபதி தொடர்பு சாதனங்களுக்கு எதிராக விசேட சட்ட விதிகளைப் பயன்படுத்துவது தொடர்பாகத் தனது அதிருப்தியை வெளியிட்டார். (இ-10)

# பொதுமக்களுடன் இணைந்து படையினர் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜன. 19

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைப் பகுதி, சுற்றாடல் பகுதி ஆகியவற்றை துப்புரவாக்கும் சிரமதானப்பணியில் இராணுவத்தினர், பொலீஸார் பொதுமக்களோடு இணைந்து நேற்று ஈடுபட்டனர்.

513 பிரிக்கேட் படையணியின் பிரிகேடியர் சி. ஜே. கே. ஜயரத்தினாவின் ஏற்பாட்டில் இச்சிரமதானப் பணியில் இராணுவத்தினரும், கோப்பாய் பொலீஸ் நிலையப் பொலீஸாரும் நூற்றுக்கணக்கில் ஈடுபட்டனர்.

இந்த வைத்தியசாலைச் சுற்றாடல் பகுதி மற்றும் உட்பகுதி உட்பட கிணறும் துப்புரவு செய்யப்பட்டன.

புனரமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் நாளை முதல் வெளிநோயாளர் பிரிவை இயங்கச் செய்வதற்காகவே இந்தச் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டதாக 513 பிரிகேட் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

வைத்தியசாலைப் பொறுப்பாளர் டாக்டர் திருமதி சிவலோகநாதனும் இதில் கலந்து கொண்டார். (உ-3)

## புலிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடையை எதிர்த்தோ அல்லது ஆதரித்தோ தி. மு. க. எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இன்று மறுமலர்ச்சி தி.மு.கவின் பொதுச் செயலாளருமான கோபாலசாமி யாழ்ப்பாணம் சென்றது பல நாள்கள் கழித்தே தமக்கு தெரிய வந்ததாகவும் அதற்காகக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அவரைக் கண்டித்ததாகவும் கருணாநிதி கூறினார்.

1986 ஆம் ஆண்டில் இந்திய–இலங்கை ஒப்பந்தத்தினைச் செய்த போது ராஜீவ் காந்தியின் நோக்கத்தை தாம் குறை கூறவில்லை என்றும் —

ஆனால் இத்த உடன்பாட்டில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஈடுபடுத்தாததையே தாம் அப்பொழுது குறை கூறியதாகவும் கருணாநிதி தெரிவித்தார். (இ-5)

## நாகர் கோயில் வீதியில் சடலம்

தென்மராட்சி, ஜன.19

எழுதுமட்டுவாள் நாகர் கோயில் வீதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் காலை காணப்பட்டது.

கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் பச்சைநிறப் பெனியனும் இச்சடலத்தில் காணப்பட்டன. இச்சடலம் பற்றிய மேலதிக தகவல் கிடைக்கவில்லை. [இ-117]

## ஆபிரகாம் ஹெப்ரோனில் பிறந்தவர்

ஜெரூசலேம், ஜன. 19

ஹெப்ரோன் பலஸ்தீனர்கள், யூதர்கள் ஆகிய இரு இனத்தவர்களுக்குமே முக்கியமான நகரம் ஆகும்.

இரு இனத்தவர்களும் பைபிளின் பழைய ஏற்பாட்டில் தெரிவிக்கப்படும் ஆபிரகாமையே தங்கள் முதல் மூதாதையராக ஏற்கிறார்கள்.

இந்த ஆபிரகாம் ஹெப்ரோன் நகரிலேயே பிறந்தார் என அவர்கள் நம்புகிறார்கள்.

ஹெப்ரோன் ஒப்பந்தத்தின் மூலம் ஹெப்ரோன் நகரம் பலஸ்தீன மக்களின் உரிமையாகிறது. மேலும் அவர்களைப் பொறுத்தவரை 30 ஆண்டு கால இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்துள்ளது. (இ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-01-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org